T. V. சேஷகிரி ஐயரவர்களும், மதுரை ஐகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் T. C. ஸ்ரீனிவாஸையங்காரவர்களும், யுநிவர்ஸிடி புரொபெஸர் ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும், தஞ்சைவக்கீல் ராவ் பஹதூர் ஸ்ரீமான் K. S. ஸ்ரீநிவாஸ பிள்ளை அவர்களும், சென்னை School Book and Literary Society அங்கத்தினர்களும், சென்னை, C. குமாரசாமி நாயுடு கம்பெனியாரவர்களும், மேரிராணி கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்களும் முதலிய உபகாரிகள் பலர் என்று தெரிகின்றேன்.

இந்த நூற்பரிசோதனைக்குத் துணையாயின பிரதிகள் :

சென்னை Oriental Manuscript Library பிரதியைப் பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத்துப் பிரதி ... ... ... 1.

(இது செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ உ. வே. திரு. நாராயண ஐயங்கார் ஸ்வாமிகள் தமிழ்ச் சங்கத்திற்குத் தந்துதவிய தேவர்பிரான் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதியுடன் ஒப்புநோக்கித் திருத்தஞ் செய்யப்பட்டது.)

பெரும்பழனை ஏட்டைப்பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத்துப் பிரதி ... ... ... ... 1.

திருநெல்வேலி ஸ்ரீமான் நெல்லையப்பக் கவிராயரவர்கள் ஏடு 1.

காலஞ் சென்ற சென்னை ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் ஏடு ... ... ... ... 1.

ஷையார் காயிதப் பிரதி ... ... ... 1.

சென்னை மேரிராணியார் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா. ரா. நமச்சிவாய முதலியாரவர்கள் பிரதி ... ... 1.

திருமயிலை வித்வான் ஸ்ரீமான் சண்முகம் பிள்ளையவர்கள் ஏடு (இது குறை) ... ... ... ... 1.

இங்ஙனம் பொருளானுஞ் செல்வாக்கானும் பிரதிகளானும் இந்நூலச்சிடுதற்கண் உபகரித்த பெரியோர்கட்கும், பொருட் செலவையும் சிரமத்தையும் சிறிதும் பாராட்டாது இதனை வெளியிடுதலிலே கண்ணுங் கருத்து முடையராய் வேண்டிய வேலைகளைச் செய்து நிறைவேற்றிய ஷை ஐயங்காரவர்கட்கும் இத்தமிழ் நாடு நன்றி பாராட்டுங் கடப்பாடுடையதாகும்.

இங்ஙனம்

ரா. இராகவையங்கார்

சேதுஸம்ஸ்தான வித்வான்.